குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குமாரபாளையம்.

**STC.No. 651/2023**

வழக்கு சாட்சி ம.சா.

2026ம் ஜூலை மாதம் 07–ம் நாள் மனுதாரர்தரப்பு சாட்சியாகிய வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.ராஜேந்திரன், உதவியாளர் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | P.செந்தில்குமார் | தொழில் | |
| த/பெ(அ) க/பெ. | | வயது | |
| கிராமம் | | | |
| தாலூக்கா | | | |

**(Accused present).**

நாள்: 07.07.2026

**முதல் விசாரணை தொடர்ச்சி**

20.02.2023ம் தேதி நான் அறுபடை வீடு கோவிலுக்கு சென்றிருந்தேன், அப்போது எடுத்த புகைப்படங்கள் தான் அது தற்போது அந்த புகைப்படத்தை தாக்கல் செய்கிறேன். **அந்த புகைப்படங்கள் எமசாஆ.3 ஆக குறியிடு செய்யப்படுகிறது.**

## குறுக்கு விசாரணை

மொபைல் எந்த வருடம் வங்கியது என்றால் எனக்கு தெரியாது. எமசாஆ.3 புகைப்படத்தை எந்த மொபைலில் எடுத்தோமா அந்த மொபைலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கிற்காக புகைப்படத்தை தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல அது உண்மையான புகைப்படம் தான். நான் கொடுத்த பதில் அறிவிப்பில் புகைப்படத்தை பற்றி சொல்லியுள்ளேனா என்றால் இல்லை பொய் வழக்கு என்று சொல்லியுள்ளேன். திருச்செந்தூர்போன விபரத்தை பதில் அறிவிப்பில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை பொய் வழக்கு என்று சொல்லியுள்ளேன். நான் திருச்செந்தூர்போகவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த புகைப்படம் உரிய மொபைலில் எடுக்கவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல உண்மையான புகைப்படம் தான்.